# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### வாசிப்பு – கீழ்ப் பிரிவு – 1ஆம் 2ஆம் வகுப்பு

எமக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே.

அவர்கள் எம்மைச் சீராட்டி, பாராட்டி வளர்க்கிறார்கள்.

அவர்களை விடச் சிறந்தவர்கள் நமக்கு யாருமில்லை.

அவர்கள் உணவும், உடையும் தந்து எம்மைப் படிக்க வைக்கிறார்கள்.

நாம் படித்து பட்டம் பெற்று உயர் தொழில் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

இத்தகைய பெற்றோரை தெய்வமாகப் போற்ற வேண்டும்.

அவர்கள் சொல்லுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

அவர்கள் சொல்லும் வேலையை தட்டிக் கழிக்காமல் உடனுக்குடன் செய்து கொடுக்க வேண்டும்.

அவர்களிடத்து ஒருபோதும் பொய் சொல்லக் கூடாது.